பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5·00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2202 ஐப்பசி 30 சனிக்கிழமை [16-11-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 347

வடக்கு - கிழக்கு நிவாரணம்: ஆராயக் கனடாவில் மாநாடு

அரசு, புலிகள் உட்பட பல தரப்பு பிரதிநிதிகளும் பங்குபற்றுவர்

யாழ்ப்பாணம், நவம்பர் 16

வடக்கு, கிழக்கில் ஏற்பட்டுள்ள பட்டினி நிலையைப் போக்கி, உணவு விநியோகத்தைச் சீர்செய்வது குறித்தும், நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்துவது குறித்தும் ஆராய்ந்து உரிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக கனடா தலைநகர் ஒட்டாவாவில் விசேட மாநாடு ஒன்று எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

சமாதான அமைப்புக்கள் சில ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருக்கும் இந்த மாநாட்டில் ஸ்ரீலங்கா அரசு, விடுதலைப் புலிகள் இயக்கம் ஆகியவை உட்பட பல்வேறு தரப்பு பிரதிநிதிகளும் பங்குபற்றக் கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் ''சமாதானத்துக்கான நிலையம்'' என்ற சர்வதேச சமாதான அமைப்பு இந்த மாநாட்டைக் கூட்டியிருக்கிறது.

விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் தற்போது ஈடுபட்டுவரும் 'குவாக்கர்' என்ற சமாதான அமைப்பு மற்றும் ஜெனிவாவில் உள்ள செஞ்சிலுவை இயக்கம், கன

[4 ஆம் பக்கம் பார்க்க]

ஷெல், பீரங்கி தாக்குதல்கள்

யாழ்ப்பாணம், நவ. 16

குடாநாட்டிலுள்ள பல முகாம்களில் இருந்தும் நேற்று முன்தினம் இரவு பரவலாக ஷெல், பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. படையினர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கண்டபடி வேட்டுக்களையும் தீர்த்தனர். இதனால் ஆங்காங்கே சேதங்கள் ஏற்பட்டன.

காரைநகர், கட்டுவன், தீவகப் பகுதி, பலாலி, கீரிமலை

[4 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி



அப்ப...... சீமையிலிருந்து புதுசா பீல்ட் மார்ஷல் வாறார் எண்டு சொல்லுங்கோ......!

ஆணையாளரிடம் நேற்று யாழ். எம். பிக்கள் மகஜர்

குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை உடன் நீக்கக் கோரும் மகஜர் ஒன்று யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கும் அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளரிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் எம். பிக்களான திரு: எட்வேர்ட் செபஸ்தியாம்பிள்ளை, திரு வி. வி. கே. சிவஞானம் ஆகியோர் இந்த மகஜரைக் கையளித்தனர்.

வடக்கு, கிழக்கில் தொழில் இழந்து பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் மகஜரில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது: (உ-3)

போரில் வெற்றி உறுதி புதிய தளபதி நம்பிக்கை

''புலிகளுடனான போரில் புதிய யுக்திகளையும் நுட்பங்களையும் மாற்றியமைப்பதன் மூலம் புலிகள் இயக்கத்தைப் பின்னடையச் செய்யலாம். இந்தப் போரில் நாம் வெற்றி பெறுவது உறுதி.''

— இப்படிக் கூறியிருக்கிறார் சிறீலங்கா இராணுவத்தின் புதிய தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன. அவர் புதிய தளபதியாக நேற்றுப் பதவி ஏற்றார்.

தளபதி பதவியில் இதுவரை கடமையாற்றிய ஜெனரல் ஹமில்டன் வனசிங்க கூட்டுப் படைகளின் தளகர்த்தராக நேற்றுப் பதவியேற்றார்.

தளபதி பதவி ஏற்றதன் பின் லெப்டினன்ட் ஜெனரல் வைத்தியரத்ன கருத்து வெளியிடுகையில் —

இப்போது எடுத்து வரும் இராணுவ நடவடிக்கை முறைகளை மாற்றி அமைக்க உள்ளேன்.

யாழ்ப்பாணம் மீது எடுக்கும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டால் அதிக உயிரிழப்பு ஏற்படும் என இராணுவம் அஞ்சுகிறது — என்று குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பகுதியில் முன்னேறக்கூடிய புதிய நிலையில் படையினர் உள்ளனர் என்றும்—

அங்கு மேலும் அதிகமான படையினரை அனுப்புவதன் மூலம் விடுதலைப் புலிகளின் தலைவர்களைப் பிடித்து விடலாம் என்றும் அவர் மறைமுகமாகக் குறிப்பிட்டார். (உ-த)

மேலும் 4 காவலரண்கள் வவுனியாவில் நிர்மூலம்!

4 படையினர் பலி; கவச வாகனமும் நாசம்

யாழ்ப்பாணம், நவ 16

வவுனியா, சிப்பிக்குளம் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் காவலரண்கள் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர். புலிகளின் தாக்குதலினால் நான்கு காவலரண்கள் அழிந்து நாசமாகின என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த தாக்குதல் நடந்த சமயம் பிரதான முகாமில் இருந்து உதவிக்கு வந்த இராணுவத்தினரும் வழிமறித்துத் தாக்கப்பட்டனர் என்றும்—

அப்போது படையினர் நால்வர் அந்த இடத்திலேயே பலியாகினர் என்றும்—

ஏனையோர் அங்கிருந்து தப்பி பின்வாங்கி ஓடிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சிப்பிக்குளம் பகுதியில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

5 வேங்கைகள் களப்பலி!

யாழ்ப்பாணம். நவ 16

வவுனியா, சிப்பிக்குளம் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் ஐந்து வீரவேங்கைகளும் களப்பலியானார்கள்

இரண்டாம் லெப்டினன்ட் மைக்கல் [பூலோகம்குமார்-முல்லைத்தீவு]. பெனாகரன் [சுப்பிரமணியம் விஜயகுமார்-வவுனியா], அலகசாண்டர் [கதிரவேலு தனேஷ்வரன்-வவுனியா], மகேந்திரன் [சந்தானம் ரவிச்சந்திரன்-நெடுங்கேணி], குஞ்சன் [சுப்பிரமணியம் கருணாகரன்-முள்ளியவளை] ஆகியோரே அந்த வீரவேங்கைகள் ஆவர்.

கீரிமலையில் மோதல்

[illegible], கீரிமலைப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரும் புலிகள் போராளிகளும். நேற்றிரவு 9 மணியளவில், மழை குறைந்த சமயம் மோதலில் ஈடுபட்டனர்.

சுமார் 15 நிமிடங்கள் வரை மோதல் நீடித்தது. அதைத் தொடர்ந்து படையினர் இளவாலை, மாரீசன்கூடல் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர். (ஐ-68)

தாய்லாந்து வாசிகள் இருவர் உட்பட 4 பொறியியலாளர்கள் கடத்தப்பட்டனர்?

வாகரைப் பகுதியில் சம்பவம்

கொழும்பு, நவ. 16

மட்டக்களப்பு மாவட்டம் வாகரை, புனானைப் பகுதியில் மின்கோபுர நிர்மாண வேலைகளில் ஈடுபட்டிருந்த— தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த இரு பொறியியலாளர்களும் மற்றும் சிங்களவர்களான இரு பொறியியலாளர்களும் கடந்த இரு தினங்களுக்கு முன் காணாமல் போய் விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அவர்கள் பயணம் செய்த வாகனங்களையும் காணவில்லை.

அனேகமாக இனம் தெரியாதோரால் அவர்கள் கடத்தப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

நால்வரையும் விடுதலைப் புலிகளே கடத்தியிருக்கலாம் என்று ஸ்ரீலங்கா அரச தரப்பினர் குற்றம் சுமத்தியிருக்கின்றனர்.

ஆனால் வெளிநாட்டுப் பிரசைகளைக் கடத்தும் நடவடிக்கை எதிலும் விடுதலைப் புலிகள் [illegible] ஈடுபடவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (உ-த)

கிளாட்ஸ்ரோனின் இடத்துக்கு

புதிய பிரிட்டிஷ் தூதராக ஜோன் பீல்ட் நியமனம்

ஸ்ரீலங்காவுக்கான பிரிட்டிஷ் தூதராக ஜோன் பீல்ட் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் இந்த மாத இறுதியில் கொழும்புக்கு வந்து தமது பதவியை ஏற்பார்.

ஸ்ரீலங்காவின் உள்நாட்டு அரசியலில் தலையிட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் முன்னைய பிரிட்டிஷ் தூதர் டேவிட் கிளாட்ஸ்ரோன் ஸ்ரீலங்காவிலிருந்து வெளியேற்றப்பட்டார் என்பது தெரிந்ததே.

அதனைத் தொடர்ந்து புதிய தூதுவர் பதவியேற்கும் வரை ஸ்ரீலங்காவுக்கான பிரிட்டிஷ் உதவிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் என்றும்—

புதிய தூதர் பொறுப்பேற்ற பின்பும் மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை கவனித்தே உதவித் திட்டங்கள் குறித்து மறுபரிசீலனை செய்யப்படும் என்றும் பிரிட்டிஷ் அரசு, ஸ்ரீலங்காவிற்குத் தெரியப்படுத்தியிருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். [உ-த]

கிளிநொச்சி, வன்னியிலும் மாவீரர் வார ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், நவ. 16

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலும் மாவீரர் வாரத்தை வெகு சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

விடுதலைப் புலிகளின் வெகுசன அமைப்புகள், நிர்வாக [illegible] அமைந்துள்ள விளக்கக் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் கடந்த ஒரு வார காலமாக அந்த மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன. பாடசாலைகள், பொது இடங்களில் கிராம ரீதியாக இந் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

மூன்று மாவட்டங்களிலும் நடைபெற்ற கலந்துரையாடல்கள் மற்றும் விளக்கக் கூட்டங்களில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை பண்பாட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை, மக்கள் [illegible] முன்னெடுப்பு பிரிவுப் பொறுப்பாளர் திரு. பரா, வன்னிப் பிராந்திய அரசியல் நிர்வாகப் பொறுப்பா

(4 ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

புதிய சிங்கர் தையல் மெஷின் விற்பனைக்குண்டு. தொடர்பு: M. சுஜீவன், 6/1, அம்மன் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். [18801]

அ. குமரகுரு எழுதிய ஓர் ஆய்வு நூல் ''இறந்தபின் எங்கு செல்கிறோம்'' எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். விலை ரூ 18/- [18674]

தேவை

கியூட்டரி வாங்கு, மேசை உடன் தேவை. தொடர்பு கொள்ளவும்: விக்னா கல்வி நிறுவனம், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி 0795]

இடமாற்றம்

தீவகத்தில் ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவில் சேவையாற்றிய 'பாக்கியம் குழந்தைகள்' வைத்திய சாலை தற்காலிகமாக கல்வியங்காட்டில் இருந்து ஒரு மைல் தொலைவில் உள்ள இருபாலைச் சந்தி, குமரபுரம் இல்லத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. நிர்வாகம். [18700]

திருமண சேவை

சகல தொழில்களிலும் மணமகன்மார் உள்ளனர். எல்லா மதங்களிலும் திருமணத் தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம், புகைப் படத்துடன் எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம், கே. கே. எஸ். வீதி, மல்லாகம். [437)8

காணவில்லை

8 வயது வெள்ளை பொமரேனியன் நாய்க்குட்டியை 09-11-91 இல் இருந்து காணவில்லை. கண்டு பிடித்து கீழ்க்கண்ட முகவரிக்கு தகவல் கொடுப்பவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். வ. இரத்தினசிங்கம், எரிபொருள் நிலையம், றொட்டியாலடி, சுன்னாகம். [18804]

12-11-1991 இரவு ஊரியான் பாதையில் சின்னையா பாலசிங்கத்தின் தேசிய அடையாள அட்டை, C. T. B அடையாள அட்டை, பஸ் மற்றும் முக்கிய தஸ்தாவேஜுகள் காணாமல் போய்விட்டன. கண்டெடுத்தவர்கள் மேற் குறியவற்றை மட்டும் பஸ் டிப்போ, கோண்டாவில் அல்லது கி. பாலசிங்கம் கரந்தன் மேற்கு, நீர்வேலி என்னும் முகவரிக்கு தயவு செய்து அனுப்பி வைக்கவும். (4390]

மணமக்கள் தேவையா?

அவுஸ்திரேலியா, கனடா, லண்டன், டென்மார்க், ஜேர்மனி, பிரான்சிலுள்ள மணமக்கள் இருக்கிறார்கள். விரும்பிய பாணியில் தரப்படும். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [18802]

மணப் பெண்கள் தேவை

38 வயது B. Sc. சிவில் பொறியியலாளருக்கும், 29 வயது குற்றமற்ற எக்கவுண்டனுக்கும், 30 வயது [illegible] T A க்கும், குற்றமுள்ள 32 வயது சட்டத்தரணிக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். [18803]

நோவு வைத்தியம்

ஒட்டப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [4326]

வினாத்தாள் ஆண்டு (4, 5)

புலமைப்பரிசில் பிரபல பாடசாலை அனுமதி மாதிரி வினாத்தாள்களை மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம். ஆண்டு 4 வினாத்தாள் 17-11-1991 ஞாயிறு வெளியிடப்படும். பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (18427)

ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும் பியூரோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். [சி-0798]

தவறிவிட்டது

14-11-1991 இல் மல்லாகத்திற்கும், சுன்னாகத்திற்கும் இடையில் கறுப்பு நிற உலோக பிரேம் கொண்ட மூக்குக்கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர் மல்லாகம் சந்தியில் உள்ள பத்திரிகை விற்பனையாளர் கடையில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். சன்மானம் வழங்கப்படும். (18806)

இணைப்பதிகாரிகள் நியமனம்

கொழும்பு, நவ. 16

எட்டு மாகாண சபைகளுக்கும் இணைப்பதிகாரிகள் நியமனம் செய்யப்படவுள்ளனர் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

முதலாவது பெண் விமானி

கொழும்பு, நவ. 16

எயர் லங்காவின் முதல் பெண் விமானியாக 32 வயது நிரம்பிய லொறின் ஹரிஸ் நியமனம் பெற்றுள்ளார். (இ-த)

A/L *Maths*

திரு. குணசிங்கம்
B. Sc. [Hons]

தூய/
முக்கோணியின் பண்பு
பிரயோக.
நிலையியல் அமைப்பு
ஆரம்பம்; 16-11-1991
முற்பகல் 10 மணி

Personal
NEW SCIENCE
CENTRE
Jaffna.

93A/L, 92A/L

91 A/L மீட்டல் & வினா - விடை நடைபெறுகிறது.

பௌதிகவியல்: சௌந்தி
இரசாயனவியல்: செல்வா
விலங்கியல்: ஈஸ்வரதாசன்
தாவரவியல்: பாலசுப்பிரமணியம்
தூய/பிரயோக; குணசிங்கம்

[சி 0799]

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான குழு

பழனி காவல் நிலையத்தை தாக்கி ஆயுதம் எடுக்க திட்டம்

தமிழ்நாடு பொலீஸார் தெரிவிப்பு

சென்னை, நவ 16

விடுதலைப் புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்ற தமிழ்நாட்டில் இயங்கும் குழு ஒன்று, பழனியில் உள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் படைப் பிரிவைத் தாக்கி ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் கைப்பற்றத் திட்டமிட்டிருந்ததாக தமிழ்நாடு பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

பழனியைச் சேர்ந்த பி. சத்திமூர்த்தி உட்பட ஐவர் இது தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள மற்றும் ஒருவரான வால் மாணிக்கம் என்பவர் விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர் என்றும்—

தஞ்சாவூர் மாவட்டம் கோடிக்கரையைச் சேர்ந்தவர் என்றும்—

விடுதலைப் புலிகளுக்கு மண்ணெண்ணெய், பெற்றோல் போன்ற எரிபொருள்களை அனுப்பி வந்தார் என்றும் பொலீஸார் மேலும் தெரிவித்தனர்.

சதிமூர்த்தி உட்பட மூவரை அடுத்த மாதம் 19 ஆம் திகதி வரை நீதித் துறைக் காவலில் வைக்கவும்-

மற்றும் இருவரையும் இம் மாதம் 19 ஆம் திகதி வரை பொலீஸ் காவலில் வைக்கவும் தனி நீதிமன்ற நீதிபதி எஸ். எம். சித்திக் உத்தரவிட்டார். (இ-த)

வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்வியாண்டு 1991/92

இலங்கை பல்கலைக்கழகங்களின் பட்டப்பாட நெறிகளான

- ★ கலை முதற் தேர்வு G. A Q
- ★ விஞ்ஞான முதற் தேர்வு G S Q.
- ★ வர்த்தக முதற் தேர்வு [First in Commerce]

க. பொ. த. உயர்தரம் கணிதம்/வர்த்தகம்/கலைப் பிரிவில் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

உதவிப் பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி 0895]

சன்மார்க்கசபை-குரும்பசிட்டி

இரசிகமணி, இலக்கியச் செல்வர் கனக. செந்திநாதன் பதின்நான்காம் நினைவு தினம்

இடம்:- சம்பந்தர்கோட்டம், நல்லூர்.
காலம்:- 17-11-1991 ஞாயிறு காலை 9-00 மணி.
தலைவர்:- கலாகேசரி ஆ. தம்பித்துரை
(பிரதிக் கல்விப் பணிப்பாளர் - சித்திரம்)

நினைவுப்பேருரை
''பழமைக்கும் புதுமைக்கும் ஒரு பாலம்''
திரு. ஏ. ஜே. கனகரட்ணா அவர்கள்.

கருத்தரங்கு
''கலை இலக்கியத்துறையில்
இன்றைய எதிர்பார்ப்புகள்''
செம்பியன் செல்வன்- நவாலியூர் சச்சிதானந்தன்-
அ. யேசுராசா சொக்கன்-ஏ. ரி. பொன்னுத்துரை

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ★

க. இராமநாதன்,
பிரசார செயலாளர்.
குரும்பசிட்டி. (18750)

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(கலை வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

92 DAY CLASSES
(8-00 — 2-00)

ஆரம்பம்: 18 - 11 - 1991
[காலை 8-00)

பொருளியல் - திரு. கலாகரன்
வர்த்தகம் - திரு. இரட்ணம்
கணக்கியல் - திரு. S. K. பிரபாகரன்
அளவையியல் - திரு. வரப்பிரகாசம்
இந்துநாகரிகம் - பிரபல ஆசிரியர்
தமிழ் - பிரபல ஆசிரியர்

மு குறிப்பு:- அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

[சி/ 0789]

பதவி வெற்றிடம்

யாழ் நகரில் முன்னோடி பொறியியல் நிறுவனம் ஒன்றில் பின்வரும் பதவிகளில் கடமையாற்ற வெற்றிடம் உண்டு.

1. மெக்கானிக்கல் போர்மன் 2. கணக்காளர் (ஆண்)

தொழிலின் போது அனுபவம், திறமை ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 25-11-91

மே/பா:- இல, 368,
உதயன். (C/0902)

மரண அறிவித்தல்கள்

தளையசிங்கம் சிவதாஸன்

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த தளையசிங்கம் சிவதாஸன் (இளைப்பாறிய கணக்காய்வாளர்) 15-11-1991 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற திருமதி யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், திரு. இராகுலன் (வருமான வரி கணக்காய்வாளர்- பாரெய்ன்) செல்வி ரேவதி (லண்டன் பல்கலைக்கழகம்) அவர்களின் அன்புத் தந்தையாரும், திருமதி சிவனேஸ்வரி இராகுலனின் (பாரெய்ன்) மாமனாரும், செல்வன் சாய்சரனின் பேரனும், குகதாஸன் (அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம், மருதனார்மடம்), டாக்டர் தேவதாசன் (டிக்கோயா அரசினர் வைத்தியசாலை) அவர்களின் சகோதரரும், திரு. வே. வாமதேவன் நீர்ப்பாசன இலாகா, புத்தளம்) அவர்களின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் 16-11-1991 (சனிக்கிழமை] இன்று காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
த. குகதாஸன்.

வேணிலை,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி. [18808]

வெற்றிவேலு பராசக்தி

காலஞ்சென்ற டாக்டர் S A வெற்றிவேலுவின் அன்பு மனைவி பராசக்தி 3-11-1991 இல் கொழும்பில் காலமானார். இவர் டாக்டர் ஞானேஸ்வரன், காலஞ் சென்ற சட்டத்தரணியும், முன்னாள் யாழ் எம். பி. யுமான யோகேஸ்வரன், டாக்டர் மகேஸ்வரன், டாக்டர் ராஜேஸ்வரன், டாக்டர் ஜெகதீஸ்வரி, பாலயோகினி, கமலேஸ்வரி, சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதிகள் ஆன், சரோஜினி, வாசுகி, டாக்டர் சந்திரா, டாக்டர் இராமநாதன், டாக்டர் நடராசா, டாக்டர் தயாபரன். டாக்டர் ஜெயப்பிரகாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், டாக்டர் ரமேஷ்குமார், டாக்டர் செந்தில்குமார், டாக்டர் கிரிகுமார், டாக்டர் நிரஞ்சலி, டாக்டர் மீரா, ராதிக்கா, சேசன், கமலினி, டாக்டர் நிருபன், முரளி, அருணன், வாணி, மிதுலன், சுரேந்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் மரணச் சடங்குகள் கொழும்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
டாக்டர் விக்கினேஸ்வரன் [மருமகன்]

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். [18805]

திரு. தம்பு பொன்னம்பலம்

[இளைப்பாறிய புகையிரதப் பகுதி கணக்காளர்]

மீசாலையைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. தம்பு பொன்னம்பலம் 15-11-91இல் காலமாகி விட்டார். இவர் தையலம்மாவின் அன்புக் கணவரும், பத்மாசனி, தனபூஷணி, காலஞ்சென்ற சாரதா ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசுப்பிரமணியம் (ஆசிரியர், R. C., புங்குடுதீவு), சுவாமிநாதன் (உரிமையாளர், கனகதாரா அச்சகம், திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிராமி, பதுமலன், அபர்ணா ஆகியோரின் பாசமுள்ள பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 11 மணியளவில் நடைபெற்று, அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
P. பாலசுப்பிரமணியம்
(மருமகன்)

ஸ்ரீபத்மம்,
பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். (4391)

உதயன்

மாவீரருக்கு அஞ்சலி

இம்மாதம் 27 ஆம் திகதி ஈழத் தமிழ்ப் பிரதேசங்கள் எல்லாவற்றிலும் மாவீரர் நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது. அதற்கான ஏற்பாடுகள் இம்மாதத் தொடக்கத்தில் இருந்தே பரவலான முறையில் நடந்து வருகின்றன.

மாவீரர் வாரம் இம்மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை நடைபெறும். அதற்கு முந்திய ஒருவார காலம் மாவீரர் எழுச்சி வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எழுச்சி வாரம் நேற்றே ஆரம்பமாகி விட்டது.

மாவீரர் வாரம் நடைபெறுவதற்கு முதலில் தமிழ்ப் பகுதிகளைச் சுத்திகரித்தும், துப்புரவாக்கியும் புனிதமாக வைத்திருக்கும் பணிகள் மாவீரர் எழுச்சி வாரத்தில் நடக்கவுள்ளன. வீடுகள், வீதிகள், பொது ஸ்தாபனங்கள் ஆகிய இடங்களைத் தூய்மையாக வைத்திருந்து புனிதமான ஒரு புறச்சூழலை உண்டாக்குவதே அதன் நோக்கமாகும்.

எழுச்சி வாரத்தில், கிராம மட்டங்களில் அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நினைவுக் கூட்டங்களும், கலந்துரையாடல்களும் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவும் மாவீரர் வாரத்துக்கு மேலும் வலுவூட்டும், எழுச்சி தரும், ஒரு நடவடிக்கையே. கிராமங்களைச் சேர்ந்த மக்கள், மாவீரர்களுக்குப் பொதுவாக அஞ்சலி செலுத்துவதோடு நிற்காமல், தமது பகுதிகளைச் சேர்ந்த மாவீரர்களைத் தனித்தனியாக நினைவு கூரவும், அவர்களின் தியாகத்தையும், சிறப்பையும் அறியவும் வழி செய்யப்படுகிறது.

மக்களுக்காகவும், மண்ணுக்காகவும் உயிர் நீத்த மாவீரர்களை நேசித்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதும், நினைவு கூருவதும் தமிழ் மக்களின் தலையாய கடமையாகும். தங்கள் சொந்தச் சுக நலன்களையும், வாழ்க்கையையும் துறந்து மக்கள் நலன் ஒன்றையே நாடி தமது இன்னுயிர் ஈந்த போராளிகள், தமிழர்கள் வாழும் காலம் முழுவதும் நினைவு கூரப்பட வேண்டியவர்கள் தேசத்துக்காக தமது தேகத்தைத் தீயிலிட்டவர்கள் தேசம் இயங்கும் வரையும் இடைவெளி இல்லாமல் மக்கள் இதயங்களில் பதிக்கப்பட வேண்டியவர்கள்.

இதனை மக்கள் மனதார உணர வேண்டும், வெறும் பெயருக்காக, போலியாக மாவீரர்களை நினைவு கூருவதாகக் காட்டிக் கொள்வதால் பயனில்லை. மக்களின் பொருட்டும் அவர்களின் வருங்காலச் சந்ததியினரின் பொருட்டும் தியாக மரணமடைந்த போராளிகள் செய்த சேவைக்காக அவர்களுக்குக் கைமாறு செய்யும் விதத்தில் அஞ்சலி செலுத்துவது அவசியம். ஒருவர் செய்த உதவியை மறக்காது நன்றி செலுத்துவதே பண்பாகும்.

மண் மீட்பிற்காக, உரிமைகளைப் பெறுவதற்காக உயிர் நீத்த செம்மல்களுக்கு மனதார அஞ்சலி செலுத்தினால், நாம் கஷ்டங்களிலிருந்து விடுபட வழிபிறக்கும். அவர்களை நினைந்து சிறப்பித்தால் தான் சுதந்திரத்தை அனுபவிக்க அருகதை உடையவர்களாவோம். இதனைப் பிறர் கூறி உணர வேண்டும் என்ற நிலைப்பாடு இருத்தல் ஆகாது. ஒவ்வொருவரும் தமது சொந்தத்தில் சுயமாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

புலிகளுக்கு ஆயுதம் ஏற்றியோரே கைது!

பிடிபட்ட 10 பேர் குறித்து 'இந்து' தகவல்

சென்னை, நவ 16

கடந்த எட்டாம் திகதி காரை கடற்பகுதியில் வைத்து இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்ட ஈழத்தமிழ்ப் போராளிகள் பத்துப் பேர் குறித்தும் அவர்கள் பயணம் செய்த படகு குறித்தும் 'இந்து' பத்திரிகை மேலும் சில தகவல்களை வெளியிட்டிருக்கிறது.

அதன் விவரம் வருமாறு:-

இந்த பத்துப் பேரும் விடுதலைப் புலிகளின் கடற்பறவைப் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

கடந்த பத்து மாதங்களாக இடைவிடாது கடலில் பயணம் செய்து ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் இலங்கையின் வட பகுதித் தீவிரவாதிகளுக்கு விநியோகித்து வந்தனர்.

சிங்கப்பூரிலிருந்து புறப்பட்டு வந்து, சர்வதேசக் கடல் எல்லையில் தரித்து நிற்கும் பெரிய கப்பல் ஒன்றிலிருந்து, இறக்கப்படும் ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் மற்றும் உபகரணங்களையும் அதிவேக விசைப் படகுகளில் எடுத்துச் சென்று புலிகளிடம் கையளிப்பதுதான் இவர்களின் பிரதான பணி

இவர்கள் முன்னர் சென்னையிலும் இருந்திருக்கிறார்கள். சிலரைப் பற்றிய விவரங்கள் தமிழகப் பொலீஸ் பதிவேட்டிலும் உள்ளன.

பிடிபட்ட படகில் சுமார் நூறு வகையான பொருள்கள் இருந்தன. அதில் பிரதானமானது 144 மெகா ஹேர்ட்ஸ் ரக தொலைத் தொடர்பு சாதனமாகும். மேலும் பெருந்தொகையான வெடி மருந்துகள், ஆயுதங்கள், அலுமினியப் பவுடர், இரசாயனப் பொருள்கள், 13 ஆயிரம் லீற்றர் டீசல், 10 ஆயிரம் லீற்றர் பெற்றோல் ஆகியவையும் படகில் காணப்பட்டனவாம். [உ-த]

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண

தெரிவுக்குழு உறுப்பினர் பெயர் விவரம் அறிவிப்பு

தலைவராக மங்கள முனசிங்க நியமனம்

கொழும்பு, நவ 16

இலங்கையில் சமாதானத்தையும், அரசியல் ஸ்திரப்பாட்டையும் நிலைநாட்டுவதற்கான வழிவகைகளை சிபார்சு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவராக திரு. மங்கள முனசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது நேற்றுக் காலை நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பமான போது இதனை அறிவித்தார்.

இந்தக் குழுவில் 43 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

காமினி அத்துக்கோறளை, எஸ். தொண்டமான், பி. தயாரத்தின, பெஸ்டஸ் பெரேரா, கே டி எம். பி. பண்டார, ஏ. ஆர். மன்சூர், வீரசிங்க மல்லிமாராச்சி, விஜயபால மெண்டிஸ்,

டபிள்யூ ஜி எம். லொக்குபண்டார, ரணில் விக்கிரமசிங்க, ஏ சி எஸ். ஹமீத், ஹரேந்திர கொரயா, ஈ.பி போல் பெரேரா, டிரோன் பெர்னாண்டோ, சந்திரிக ரணதுங்க, கலாநிதி விமல் விக்கிரமசிங்க, ஏ. எச். எம். அஸ்வர், திருமதி ஆர். எம், புலேந்திரன்.

எம். எஸ். செல்லச்சாமி, எஸ். எஸ். எம். அபூபக்கர், எம். எச் எம். அஷ்ரப், ஹலீம் இஷாக், கே. கருணாசரன், ஜே. கிரியல்ல, புத்திக குருகுலரட்ண, ராஜா கொலுரே, பிலிப் குணவர்த்தன.

லக்ஷ்மன் ஜெயக்கொடி, தர்மதேவ ஜயசிங்க, சோமவீர தஸநாயக்கா, ஹரேந்திரநாத் லுணுவில, ரிச்சர்ட் பத்திரண, எச் ஆர். பியசிறி, ஜெராட் பெர்னாண்டோ புள்ளே, கே. பிரேமச்சந்திரன்,

அனுரா பண்டாரநாயக்கா, கே. பி. இரத்நாயக்கா, டி. டபிள்யூ. ராஜரட்ணம், கே. சிறினிவாசன, அத்தாவுட செனிவிரத்தின, மாவை எஸ் சேனாதிராஜா, தர்மசிறி சேனநாயக்கா.

இவர்களில் அமைச்சர் எஸ். தொண்டமான், துணை அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி உட்பட 23 பேர் அரச தரப்பு எம். பிக்களாவர், எஞ்சியோர் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள்.

(உ-ஒ-த)

பல்கலைக்கழக பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் சில பரீட்சை முடிவுகளை இவ்வார மத்தியில் வெளியிட்டது.

கலைத்துறை முதலாம் வருடப் பரீட்சை, வர்த்தகத்துறை முதலாம் வருடப் பரீட்சை, வாணிப நிர்வாகத்துறை முதலாம் வருடப் பரீட்சை, இசை, பரதநாட்டியம், மிருதங்கம் ஆகிய நுண்கலைகளுக்கான டிப்ளோமா முதலாம் வருடப் பரீட்சை முடிவுகள்—

இசை, பரதநாட்டியம், மிருதங்கம் ஆகிய நுண்கலைகளுக்கான மூன்றாம் வருடப் பரீட்சை முடிவுகள், சித்தவைத்தியத் துறைக்கான நான்காம் ஆண்டுப் பரீட்சை முடிவுகள் ஆகியனவே வெளியிடப்பட்டுள்ளன.

[அ]

மத்திய வங்கி பொறுப்பேற்ற நிதி நிறுவனம் லாபத்தில்!

கொழும்பு, நவ. 16

தவறான முகாமைத்துவம் காரணமாக வங்குரோத்து அடைந்த நிலையில் 1989 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியினால் பொறுப்பேற்கப்பட்ட ''தபினான்ஸ் அன்ட் கிரடிற் கம்பனி, தற்போது பத்து லட்சம் ரூபாவை இலாபமாகப் பெற்றுள்ளது.

மேற்படி கம்பனியின் பொது முகாமையாளர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு மேற்கண்ட விவரத்தைத் தெரிவித்தார்.

தவறான முகாமைத்துவம் காரணமாக நஷ்டம் அடைந்த எட்டு நிதிக்கம்பனிகளை 1989 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கி பொறுப்பேற்றிருந்தது.

இந்த நிதிக் கம்பனிகளில் 'தபினான்ஸ் அன்ட் கிரடிற் கம்பனி'யும் ஒன்றாகும்.

1989 இல் மத்திய வங்கியினால் "தபினான்ஸ் அன்ட் கிரடிற் கம்பனி' பொறுப்பேற்கப்பட்டு 'தபினான்ஸ்' கம்பனியிடம் கையளிக்கப்பட்டது.

அது மீண்டும் செயற்படத் தொடங்கி 24 மாத காலத்தில் 10 லட்சம், ரூபாவை இலாபமாகப் பெற்றுள்ளது என்றும்—

செயற்படத் தொடங்கி 9 மாத காலத்தில் பணம் வைப்பிலிட்ட சகல வாடிக்கையாளர்களுக்கும் பணத்தைத் திருப்பிக் கொடுக்கக் கூடியதாக இருந்ததாகவும்— அதன் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

'தபினான்ஸ் அன்ட் கிரடிற் கம்பனி' தற்போது 50 லட்சம் ரூபா மூலதனத்தையும் ஒரு கோடி 10 லட்சம் ரூபா வைப்புப் பணத்தையும் கொண்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

[இ-த]

யாழ். வர்த்தகர்களுக்கு விசேட பணிப்பு

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள சகல மொத்த வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளும் தங்கள் கைவசமுள்ள அத்தியாவசியப் பொருள்களின் விவரங்களை நாள்தோறும் மக்களின் பார்வைக்கு வைக்கவேண்டும்.

இவ்வாறு யாழ். உதவி அரசாங்க அதிபர் நேற்று அறிவித்திருக்கிறார். (உ)

ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், நவ. 16

சுவாமி பிரேமானந்தாஜியின் 40 ஆவது ஜெயந்தி விழா நாளை ஞாயிறு காலை 9 மணியளவில் உடுவில் கிழக்கு — கடவுள் சுவாமிகள் ஆசிரமத்தில் நடைபெறும். [உ]

உயிரிழந்தவர் சாந்தனாம்

சென்னை, நவ. 16

திருச்சி, நாவல்பட்டு குடியிருப்புப் பகுதியில் கடந்த புதனன்று சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டவர் சாந்தன் என்பவர் என நேற்று அறிவிக்கப்பட்டது.

குண்டு சாந்தன் என்று அழைக்கப்படும் இவர், ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் பத்மநாபா கொலையுடன் சம்பந்தப்பட்ட முக்கிய நபர் என்றும்—

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகவும் இவர் தேடப்பட்டு வந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் சென்னை நீதிமன்றம் சரணடையும்படி உத்தரவிட்டிருந்த பத்துப் பேரில் சாந்தனும் ஒருவர் என்றும், இவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சயனைட் உட்கொண்டு இறந்தவர் காந்தன் என்பவர் என்று செய்தி தொடர்பு சாதனங்கள் தவறாக அறிவித்துவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது. [இ-த]

வாசுகி என்ற பெண்ணும் கைது

சென்னை, நவ, 16

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகத் தேடப்பட்டு வந்த குண்டு சாந்தனுடன் திருச்சி அண்ணா மலையில் உள்ள வீடு ஒன்றில் தங்கி இருந்தார் என்று கூறப்படும் வாசுகி என்ற பெண்ணும் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏற்கெனவே கைது செய்யப்பட்ட குணராஜா, மகேந்திரராஜா, ஞானசெல்வடியன், ஆனந்தராஜா ஆகியோருடன் வாசுகியும் தனி நீதிமன்ற நீதிபதி எஸ். எம். சித்திக் முன் ஆஜர் செய்யப்படுவதற்காக சென்னைக்கு அழைத்துவரப்பட்டுள்ளார்.

இவர்களில் குணராஜா, மகேந்திரராஜா ஆகிய இருவரும் விடுதலைப் புலிகள் தீவிரவாதிகள் என்றும் மற்றையோர் தீவிர ஆதரவாளர்கள் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

[இ-த]

தொண்டமான் டில்லி செல்கிறார்

கொழும்பு நவ 16

இளைஞர் உலகப் பிரயாணத்துறை சம்பந்தமான சர்வதேச மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக சுற்றுலா மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் எஸ் தொண்டமான் புதுடில்லி செல்கிறார்.

இந்த மாநாடு எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. [இ-த]

எழுச்சி வார கூட்டங்கள்

மாவீரர் எழுச்சி வாரக் கூட்டங்கள் இன்று சனிக்கிழமை நான்கு இடங்களில் நடைபெற உள்ளன.

வலிகாமம் பிரிவில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மண்டபத்திலும் —

வடமராட்சிப் பிரிவில் வடமராட்சி கிழக்கு பொற்பதி றோ.க. பாடசாலை மண்டபத்திலும்—

தென்மராட்சிப் பிரிவில் மீசாலை, மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்திலும் இரவு ஏழு மணிக்குக் கூட்டங்கள் நடைபெறும்.

தீவகப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான எழுச்சி வாரக் கூட்டம் இன்று பி.ப. 3 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். அங்கு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (அ)

ஷெல், பீரங்கி...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

சென்ற முகாம்களிலிருந்தே தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மூளாய், பொன்னாலை, அராலி, திருவடி நிலை, தெல்லிப்பழை, குரும்பசிட்டி மற்றும் பல பகுதிகளில் ஷெல், பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்தன.

பொன்னாலைப் பகுதியில் ஆலயம் ஒன்று சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது

மரண அறிவித்தல்கள்

திரு. இராமலிங்கம் சுப்பிரமணியம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும், தற்போது திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட இளைப்பாறிய பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரி திரு இராமலிங்கம் சுப்பிரமணியம் (செல்லத்துரை) 12-11-91 அன்று குருநாகலில் அகால மரணமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற திரு திருமதி சரவணமுத்து இராமலிங்கம் தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற திரு திருமதி சபாபதிப்பிள்ளை அம்பலவாணர் தம்பதிகளின் மருமகனும், தனபாக்கியத்தின் அன்புக் கணவரும், திருமதி இந்துமதி கணேசன் (அவுஸ்திரேலியா), மனோகரன் (ஆசிரியர், குருநாகல்), இந்திரன் (கனடா), சந்திரன் (இங்கிலாந்து) ஆகியோரின் அருமைத் தந்தையும், கணேசன் (பொறியியலாளர் அவுஸ்திரேலியா) திருமதி மனோ ரஞ்சிதம் மனோகரன் (ஆசிரியை, குருநாகல்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு மார்க்கண்டு (பிரபல வர்த்தகர், தங்கொட்டுவ), காலஞ்சென்ற கந்தசாமி (வர்த்தகர்), திரு. சோமசுந்தரம் (வர்த்தகர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் குருநாகலில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி த. சுப்பிரமணியம்
[18757]

திருமதி
நாகரத்தினம் வேலாயுதபிள்ளை

திரு. த. வேலாயுதபிள்ளை [நாமகள் அச்சகம்] அவர்களின் அன்பு மனைவியார் நாகரத்தினம் நேற்று [15-11 91] அதிகாலை சிவபதமெய்தி விட்டார்.

அன்னார் திருமதி க. Dr. ரணரஞ்சிதம் குகதாஸ் [G H. Jaffna], ச. புனிதரஞ்சிதம், இ. மனோரஞ்சிதம் ப. சந்திரவதனி [ஆசிரியை, யா. த. திருக்குடும்ப கன்னியர்மடம்], செல்வி மதிவதனி [ஆசிரியை, O. L R வித்தியாலயம் யாழ்.]. திரு. கணேசன் [T A., S. L B. C., புத்தளம்] ஆகியோரின் அன்புத் தாயாரும். திருவாளர்கள் Dr. குகதாஸ் [Dental Surgeon, G H. Jaffna], சந்திரபோஸ் [T. A., R. D A., வவுனியா] தில்லைநாதன் [ஆசிரியர், St. Patrik's College], பகீரதன் [[illegible] மாலைதீவு] திருமதி கு. ஜெயரூபி [ஆசிரியை, சாஹிரா கல்லூரி புத்தளம்] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்; இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
த வேலாயுதபிள்ளை
319 K. K S வீதி.
யாழ்ப்பாணம். [18758]

மற்றும் மரண அறிவித்தல்கள் இரண்டாம் பக்கத்தில்

தனியாரின் உணவுப்பொருள் பங்கீட்டுக்கு வழங்கப்படும்?

செயலகத்தில் இன்று ஆராய்வு

யாழ்ப்பாணம், நவ. 16

பங்கீட்டு அடிப்படையில் செயலகம் விநியோகிக்கும் உணவுப் பொருள்களின் கையிருப்பு முடிவடைந்துவிட்டதால், தனியாரிடம் உள்ள கையிருப்புப் பொருள்களை பங்கீட்டு அடிப்படையில் விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய திட்டம் சம்பந்தமாக ஆராயும் கூட்டம் ஒன்று, இன்று முற்பகல் 10-30 மணியளவில் யாழ். செயலகத்தில் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்துக்கு சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இயங்கும் வர்த்தகர் சங்கங்களின் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டுள்ளனர்.

தற்சமயம் அமுல் செய்யப்பட்டுவரும் பங்கீட்டு அடிப்படையிலான உணவு விநியோகத்துக்கு களஞ்சியங்களில் பொருள்கள் இல்லை.

கப்பலில் வந்த பொருள்களும் இறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் இவ்வார விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது

தொண்டர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ 16

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள செஞ்சிலுவைத் தொண்டர்கள், ஆதரவாளர்களுக்கான கலந்துரையாடல் தம்பசிட்டி மெதடிஸ்தமிசன் பாடசாலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை 3 மணிக்கு நடைபெறவுள்ளது. வடமராட்சிப் பிரிவு செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார், (அ)

கிளிநொச்சி..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளர் திரு. மனோ மற்றும் பிரமுகர்களும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

மாவீரர் வாரத்தை முன்னிட்டு இப்பகுதிகளில் விளையாட்டு நிகழ்ச்சிகள், மரம் நாட்டும் வைபவங்களும், சிரமதானப் பணிகளும் கிராம மட்டத்தில் நாளாந்தம் நடைபெற்று வருகின்றன.

மாவீரர் தினமான இம்மாதம் 27ஆம் திகதி வன்னிப் பிராந்தியத்தில் எட்டு இடங்களில் பொதுக்கூட்டங்கள் சிறப்பாக நடைபெறவுள்ளன. (அ)

மேலும்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த ஆறு காவலரண்கள் மீதே விடுதலைப் புலிகளின் படையணி ஒன்று தாக்குதல் நடத்தியது

இந்தத் தாக்குதல் ஒரே சமயத்தில் — சுமார் 15 நிமிடங்கள் மட்டுமே நடத்தப்பட்டது.

அந்தச் சமயம் பிரதான முகாமில் இருந்து உதவிக்கு வந்த இராணுவத்தினர் மீதும் புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர். அவர்கள் செலுத்தி வந்த இரு கவச வாகனங்கள் மீதும் புலிகள் ஆர் பி ஜி. தாக்குதலை மேற்கொண்டனர். அந்தத் தாக்குதலில் கவச வாகனம் ஒன்று எரிந்து நாசமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காவலரண்களில் இருந்த இராணுவத்தினர் பலரும், உதவிக்கு வந்த படையினரில் பலரும் காயங்களுடன் பிரதான முகாமுக்குத் தப்பி ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல்களின் போது விடுதலைப் புலிகளினால் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. அவை வருமாறு:-

★ ரி 56 — 1 ரகத் துப்பாக்கி — 1
★ 303 ரகத் துப்பாக்கி—1
★ அதற்குரிய ரவைகள்-44
★ 7 62 நடுத்தர ரவைகள் — 2 955
★ ஏ. கே. எல். எம் ஜி ரக துப்பாக்கி ரவைக் கூடுகள் — 2
★ அதற்குரிய (வில்) இணைப்பிகள் — 100
★ ஜே. ஆர். ரக கைக் குண்டுகள் — 12 (ஒ)

வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

கொழும்பு, நவ. 16

பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள், உதவி வைத்தியர்களின் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

மேற்படி வைத்தியர்களின் சங்கத் தலைவர் டாக்டர் லியனகே, சங்க அங்கத்தவர்களுக்கு விடுத்த வேண்டுகோளில் உடனடியாக கடமைகளுக்குத் திரும்பும்படி கேட்டுக்கொண்டுள்ளார், (ஒ-எ)

பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ 16

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு நிகழ்ச்சி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும். [த]

வடக்கு - கிழக்கு...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

டாவில் உள்ள அபிவிருத்தி சபை ஆகியவை உட்பட பல்வேறு சர்வதேச அமைப்புகளும் இந்த மாநாட்டை ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்த மாநாட்டில் பங்குபற்ற வருமாறு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா, திருமலை — மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் லயனல் பெர்னாண்டோ மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பியும், இனப்பிரச்சினை தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவருமான மங்கள முனசிங்க ஆகியோருக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது.

சுவீடன் உப்சாலப் பல்கலைக்கழக பேராசிரியர் பீற்றர் சேர்க்கும் மாநாட்டில் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது

பேராசிரியர் துரைராஜா மாநாட்டில் பங்குபற்றுவதற்காக — வெளிநாட்டுச் செல்வதற்கான — லீவு கோரி விண்ணப்பித்திருப்பதாக அறிய வந்தது.

வெளிநாடு செல்வதற்கான அவரது லீவு விண்ணப்பம் ஜனாதிபதியால் அங்கீகரிக்கப்பட்டால் அவர் மாநாட்டில் பங்குபற்றுவார் என்றும் தெரியவந்தது.

அரசு, புலிகள் பிரதிநிதிகள்

தற்போது பாரிஸில் தங்கியிருக்கும் விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. லோறன்ஸ் திலகரையும் —

ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் லெப்டினன்ட் ஜெனரல் சிறில் ரணதுங்கவையும் —

இந்த மாநாட்டுக்கு அழைத்து அவர்களைக் கலந்துகொள்ளச் செய்யும் முயற்சியில் மாநாட்டு அழைப்பாளர்கள் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது

மாநாடு ஏற்பாடுகள் குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்புகளும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு—கிழக்கில் பட்டினி நிலை, போசாக்கின்மை ஆகியவற்றைப் போக்குதல், சீரான உணவு விநியோகத்தை ஏற்படுத்துதல், மருந்து மற்றும் அத்தியாவசிய பொருள்களின் தட்டுப்பாட்டை நீக்குதல், புனரமைப்புப் பணிகளைத் துரிதப்படுத்துதல் உட்பட பல்வேறு விடயங்கள் இந்த மாநாட்டில் ஆராயப்படவிருக்கின்றன.

மாநாட்டில் மேற்கொள்ளப்படும் முடிவுகளைத் துரிதமாகச் செயற்படுத்த வசதியாக வடக்கு—கிழக்கில் யுத்தநிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துமாறு கோருவது குறித்தும் மாநாட்டில் ஆராயப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மாநாட்டை ஏற்பாடு செய்து வரும் "சமாதானத்துக்கான நிலையம்" உலகின் பல பகுதிகளிலும் உள்நாட்டுப் போரினால் வாடும் மக்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதிலும், அப்பகுதிகளில் சமாதானத்தை ஏற்படுத்துவதிலும் வெற்றியீட்டியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது

(உ-3)

புகைப்படப் பிடிப்பாளர் கலந்துரையாடல்

மாவீரர் நாள் சம்பந்தமாக புகைப்படப் பிடிப்பாளர்களின் கலந்துரையாடல் இன்று (16-11-91) காலை 9 மணிக்கு அருச்சுனா வீதியில் அருச்சுனா செயலகத்தில் நடைபெறும்.

கடந்த மாதம் கலந்துகொண்ட புகைப்படக் கலைஞர்களுடன், கலந்துகொள்ளாத புகைப்படக் கலைஞர்களும் பங்குகொண்டு மாவீரர் நாளை மேலும் சிறப்பிக்க உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

பொறுப்பாளர்,
அருச்சுனா
அருச்சுனா வீதி,
பலாலி வீதி,
திருநெல்வேலி.

([illegible])

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் [illegible]